**கவனிக்க.-** 2006.10.05 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1467 - 2006 ඔක්තෝබර් 13 වැනි සිකුරාදා - 2006.10.13

*1467 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 972 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 973 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 975 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | 976 |
| ஏல விற்பனைகள் | 977 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** கே. ஆர். ஜீ. விஜேசுந்தர தேசிய மற்றும் ஊழியர் நலன்புரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, ஒற்றோபர் 20 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஒற்றோபர் 05 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## ஆயுர்வேதத் திணைக்களம்

*காய்ந்த மூலிகைகள், பச்சை மூலிகைகள், காய்ந்த விறகு வழங்கலும் சலவை சேவை, பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்தம் செய்யும் சேவைகள் தொடர்பாக கேள்வி கோரல்*

2007, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து 2007, திசெம்பர் 31 ஆந் திகதிவரை கீழ்க்காணும் சேவைகள் சம்பந்தமாக ஆயுள்வேதத் திணைக்கள கேள்விப்பத்திர சபைத் தலைவரினால் கோரல் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. **விநியோகங்களும் தேவைப்படும் சேவைகளும் நிலையங்களும் :**

| | |
|---|---|
| (i) மருந்து உற்பத்திக்குரிய காய்ந்த விறகு<br>(ii) வைத்தியசாலை நோயாளிகளின் துணிகள் சலவை செய்தல் | * பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலை<br>* நாவின்ன ஆயுர்வேத பரீட்சை நிலையம் |
| (iii) பச்சை மூலிகைகள்<br>(iv) காய்ந்த மூலிகைகள் | * பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலை<br>* நாவின்ன ஆயுர்வேத பரீட்சை நிலையம் |
| (v) பாதுகாப்புச் சேவை<br>(vi) கட்டிடம் சுத்தம் செய்தல் | * ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன<br>* சுதேச வைத்தியத்துறை தொடர்பான தேசிய நிறுவனம்<br>* நாவின்ன ஆயுர்வேத பரீட்சை நிலையம்<br>* ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை |

3. **கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல்.**- மேலே குறிக்கப்பட்ட விடயங்களில் விலைகோரல் விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் மற்றும் நிறுவனங்கள், ஆயுர்வேதத் திணைக்கள பிரதான அலுவலகத்தில் விநியோகப் பிரிவிலிருந்து 2006, ஒற்றோபர் 9 ஆந் திகதி தொடக்கம் ஒற்றோபர் 26 ஆந் திகதி பி. ப. 3.00 மணிவரை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள ஆயுர்வேதத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம் :-

ஆயுர்வேதத் திணைக்களம்,
பழைய கொட்டாவ வீதி,
நாவின்ன, மகரகம.

4. **கேள்விப்பத்திரக் கட்டணம்.**- மேலே 02 இல் குறிப்பிடப்பட்ட வழங்கல் மற்றும் சேவைகளுக்காக செலுத்தவேண்டிய கட்டணம் மற்றும் பிணைக்கட்டணம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :-

| | மீளப்பெற முடியாத கட்டணம் | மீளத் திருப்பிப்பெறும் பிணைக்கட்டணம் |
|---|---|---|
| (i) மற்றும் (ii) இற்காக | ரூ. 200.00 | ரூ. 600.00 |
| (iii) மற்றும் (iv) இற்காக | ரூ. 300.00 | ரூ. 10,000.00 |
| (v) மற்றும் (vi) இற்காக | ரூ. 300.00 | ரூ. 10,000.00 |

5. **கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல்.**- விலைகோரல் விண்ணப்பப்பத்திர இரு பிரதிகளையும் இரு கடித உறைகளில் கவரிட்டு "தலைவர், கேள்விச்சபை, ஆயுர்வேதத் திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மகரகம" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது ஆயுர்வேதத் திணைக்களக் கணக்காளரின் (வழங்கல்) அலுவலகத்தில் ஒதுக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிலோ இடுதல் வேண்டும். ஓர் கடிதயுறையில் 'மூலப்பிரதி' எனவும் அடுத்த கடித உறையில் 'இரண்டாம் பிரதி' எனவும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு சேவைகள் மற்றும் விநியோகங்களிற்கும் தனித்தனியே கவரிட்டு விலைகோரல் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகள் தொடர்பாக கடிதயுறையின் இடது மூலையில் "காய்ந்த மூலிகைகள்/பச்சை மூலிகைகள்/காய்ந்த விறகு/பாதுகாப்புச் சேவை/கட்டிடம் சுத்தம் செய்தல்/அழுக்குத்துணி சலவை செய்தல் கேள்வி" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

2007, ஒற்றோபர் 27 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்வது முற்றுப்பெறும். அந்நேரம் முற்றுப்பெற்றவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் விண்ணப்பதாரரோ அல்லது அவர் அனுமதியுடைய ஒருவரோ சமுகமளிக்கலாம்.

6. அப்பிரதேச வழங்கல்களிற்கு கூடிய கவனம் செலுத்தப்படும்.

7. கேள்விச்சபையின் தீர்வு கடைசித் தீர்வாகும்.

ஆர். பி. டபிள்யூ. குணவர்தன,
ஆயுர்வேத ஆணையாளரும்
கேள்விச்சபைத் தலைவரும்.

ஆயுர்வேதத் திணைக்களம்,
பழைய கொட்டாவ வீதி,
நாவின்ன,
மகரகம.

10-256

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2007

கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கள்ளுத்தவறணையில் 2007, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2007 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையை வழங்குவதற்கு 1982 ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாகவும், நடைமுறையிலுள்ள பொது விதிகளுக்கு அமைவாகவும் கீழ் குறிப்பிட்ட விதிகளுக்கு அமைவாகவும் கேள்விப்பத்திரங்கள் 2006, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி மு. ப. 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரக் காரர்கள் நாட்டில் எந்த பிரதேசச் செயலகத்தில் இருந்தும் பெறக்கூடியதான விண்ணப்பப் படிவத்தில் முறையாக தயாரித்த படிவங்களை இங்கு கீழ்க் காணும் பட்டியலில் உள்ள நிரந்தர வைப்புப் பணத்தைச் செலுத்தியதற்காக பெறப்பட்ட பற்றுச் சீட்டுடன் இணைத்து கடித உறையின் இடதுபக்க மூலையில் மேற்படி கேள்விப்பத்திரம் வழங்கும் தவறணையின் பெயரும், இலக்கத்தையும் தெளிவாக எழுதி இப்பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் அல்லது படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது அப்பத்திரத்தில் ஏற்பட்டிருக்கும் எல்லா திருத்தங்களுக்கும் கேள்விப்பத்திரக்காரர்கள் தனது ஒப்பத்தையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். அப்படி அல்லாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியான 2006.10.31 ஆந் திகதி கேள்விப்பத்திரக்காரர்கள் சமுகம் அளிக்கலாம். கேள்விப் பத்திரங்கள் வழங்குவது 2006.10.31 மு. ப. 10.00 மணிக்கு முடிவடையும். அன்றைய தினத்தில் கேள்விபத்திரம் விற்க முடியாவிடில் 2006.12.01 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு திரும்பவும் விற்கப்படும்.

5. எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படாத கேள்விப்பத்திரங்களை அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு உண்டு. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர்கள் எவர் என அறிந்தவுடன் அன்றைய தினம் மு. ப. 12.00 மணிக்கு முன் அத்தகைய கேள்விப்பத்திரக்காரர்கள் படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு இரண்டு மாத வாடகைக்கு குறைவானதாக தீர்மானிக்கப்படும் தொகையை பிணைப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். அத்துடன் குத்தகை நிபந்தனையில் கை ஒப்பம் இடல் வேண்டும். மேலதிக விபரங்கள் தேவையானோர் கடமை நேரங்களில் படல்கும்புர பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ரீ. பீ. எம். அதபத்து,
பிரதேச செயலாளர்,
படல்கும்புர.

பிரதேச செயலகம்,
படல்கும்புர,
2006.09.15.

## மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட தவறணைகள் - 2007

| தொடர் இலக்கம் | பிரிவு | தவறணை அமைந்த கிராமம் | திறக்கும் நேரம் | வைப்பு தொகை | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| 1. | மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவு | பல்லேவராதொலை கமேவலை | மு.ப. 11.00 முதல் பி.ப. 2.00 மணி வரை பி.ப. 4.00 முதல் பி.ப. 8.00 மணி வரை | ரூ. 500 | 2006, ஒற்றோபர் 31 ஆந் திகதி மு.ப. 10.00 மணி வரை |

10-201

---

## மட்டக்களப்பு மாவட்டத்தின் துறைவரி விற்பனை-2007

2007 ஆம் ஆண்டு தை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2007 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆந் திகதி வரையிலுள்ள கால எல்லைக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கீழ்க்குறிப்பிடும் துறைகளில் ஆயவரிகள் பெறுவதற்குச் சகல உரிமைகளையும் வழங்குவதற்குத் துறைவரி விற்பனவுக்குரிய நிபந்தனைகட்கு உட்பட இத்தால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. ஒவ்வொரு கேள்விப்பத்திரங்கள் சார்பாகவும் எக்கச்சேரியிலாவது ரூபா 100 கேள்வி வைப்பாகச் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். மட்டக்களப்பு கச்சேரியில் 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை இலங்கை வங்கியின் கச்சேரி கிளையில் ரூபா 100 பணம் செலுத்தப்பட்டுப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிப்பதன் மூலம் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் சீலிடப்பட்ட தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில், துறையின் பெயரையும் "மட்டக்களப்பு மாவட்ட .................... (துறையின் பெயர்) துறைக்கான கேள்வி" என்றும் குறிப்பிட்டு மாவட்ட செயலகத்திற்கு கேள்விப்பத்திரம் கிடைப்பதற்கான கடைசி நேரத்திற்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. 2006 ஆம் ஆண்டு நவெம்பர் 09 ஆந் திகதி கீழ்க்குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் யாராவது அவ்வேளையில் இக்கச்சேரியில் சமுகம் கொடுக்க வேண்டும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்வி கோரி விண்ணப்பிக்கும் ஒப்பந்தத்தை, திருப்திகரமாகக் கொண்டு நடத்தும் பொருளாதாரத்தையுடையவர் என்பதை உறுதிப்படுத்த, தமது பிரிவிற்குரிய உதவி அரசாங்க அதிபரினால்/பிரதேச செயலாளரினால் கொடுக்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாயின் துறையை நடாத்தி ஆயவரி அறவிடத் தகுதியுள்ளதென்றும், கேள்வித் தொகையில் மூன்றில் ஒரு பங்கை பிணைப் பணமாகச் செலுத்தக்கூடிய நிதி வசதி உடையது என்றும் கூட்டுறவு ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட ஒரு அத்தாட்சிப் பத்திரத்தை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர், உடனடியாகக் கொள்வனவு செய்யும் உரிமை கொண்டவரென பிரகடனப் படுத்தப்படுவதுடன், விற்பனை நிபந்தனைகளில் கையொப்பமிட்டு கொள்வனவு தொகையில் 1/3 பங்கை பாதுகாப்பு வைப்பாகவும் செலுத்துதல் வேண்டும். 40 குதிரைச் சக்தி 15 குதிரைச் சக்தி கொண்ட வெளியகப் படகு மோட்டார் விடுவிக்கப்படுவதாயின் இதன் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு மேலும் ரூபா 50,000 பெறுமதியான ஆதனப் பிணை அல்லது ரூபா 10,000 காசுப்பிணை சமர்ப்பிக்கப்படல் அவசியமாகும்.

6. நேரில் கொடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் விற்பனை நிபந்தனைகட்கு இணங்கவோ, பிணைப்படுத்துவதற்கோ, பிணையுறுதித் தொகையை கட்டுவதற்கோ தவறுமிடத்து அவரினால் கொடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக் கட்டணத்தை அவர் இழந்தவராவார். அத்துடன் அவர் அரசாங்கத்தின் கீழ் எதுவித ஒப்பந்த வேலைகள் செய்வதிலிருந்தும் தடுக்கப்படுவார். அவ்விதிவிலக்கைத் தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட கொந்தராத்துக்காரர்களினால் விற்பனை நிபந்தனைகள் கையொப்பமிடப்பட்டு பிணையும் கொடுக்கப்பட்டு பின் சகல கேள்விப்பத்திர வைப்புத் தொகைகளும் மீட்டுக் கொடுக்கப்படும்.

7. எவ்வித காரணமும் காட்டாது எக்கேள்விப்பத்திரத்தையும் அல்லது அரசாங்க கேள்விப்பத்திரங்களையும் ஏற்றுக் கொள்ளாதிருப்பதற்கான தகுதி /உரிமை அரசாங்க அதிபருக்கு உரித்தாகும்.

8. தற்போது பாதைகள் வேலை செய்யும் துறைக்குப் பாதை கொடுக்கப்படும். அவ்வாறு கொடுப்பதற்கு அரச படகுகள், அல்லது வள்ளங்கள் கிடைக்காவிடின் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் சேவை திருப்திகரமாக நடைபெறுவதற்காக தம்முடைய சொந்த வள்ளங்களை அல்லது படகுகளை உபயோகிக்க வேண்டும். ஆனால் இயந்திரப்படகு பாவிக்கப்பட்டால் மாத்திரமே வாடகைப் பணம் கொடுக்கப்படும். இயந்திரம் பூட்டப்படாத தோணி அல்லது வள்ளத்துக்கு வாடகைப் பணம் வழங்கப்படமாட்டாது.

9. அரசாங்கத்தினால் வள்ளங்கள், பாதைகள், இயந்திரங்கள் மோட்டார்கள் துறைக் குத்தகை எடுப்பவர்கட்குக் கொடுக்குமிடத்து அவைகளை மிகவும் கவனமாகவும், மழை, வெயில் ஆகியவற்றால் பாதிக்கப்படாமலும், பழுதடையாமலும், களவு போகாமலும் மிகவும் கவனமாகப் பாதுகாப்பான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் அவற்றிற்குரிய நட்டம் துறைக் குத்தகை எடுப்பவர்களிடமிருந்து அறவிடப்படும்.

10. துறைவரி விதிகளின்படி தபால் கொண்டு செல்லும் சேவகர்களும், அரசாங்க வாகனங்களும், துறைக் கூலி செலுத்த வேண்டியதில்லை. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் தபாற் சேவகர்களிடமிருந்தும் அரச வாகனங்களிடமிருந்தும் துறைக்கூலி ஏற்கக் கூடாது.

11. மட்டக்களப்புக் கச்சேரிக்கு விண்ணப்பிக்குமிடத்து மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

12. விற்பனையின்போது தகுதியான ஒப்பந்தக்காரர் தேர்ந்தெடுக்கப்படாதுவிடின், 2006.11.24 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மறு விற்பனை மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெறும்.

13. ஒப்பந்தப்பத்திரத்தில் அனுமதிக்கப்பட்ட முத்திரைவரி ஒப்பந்தக்காரரால் செலுத்தப்படல் வேண்டும்.

சி. புண்ணியமூர்த்தி,
மாவட்டச் செயலாளரும்
அரசாங்க அதிபரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

கச்சேரி,
மட்டக்களப்பு,
14.09.2006.

**அட்டவணை**

| துறையின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவு | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|
| மண்முனை | மண்முனை தென்மேற்கு, பட்டிப்பளை | 09.11.2006 - மு. ப. 10.00 மணி |
| அம்பிளாந்துறை | மண்முனை தென்மேற்கு, பட்டிப்பளை | 09.11.2006 - மு. ப. 10.00 மணி |
| குறுமன்வெளி | போரதீவுப்பற்று, வெல்லாவெளி | 09.11.2006 - மு. ப. 10.00 மணி |

10-267

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோனி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கம்பஹா, உக்கல்பட வீதி, பிரபாகம, இலக்கம் 52, தற்காலம் ரனால டெடிகமுவ, ஜயசிங்கமுல்லையைச் சேர்ந்த பத்மலதா விஜேரத்ன ஆகிய நான், அவிசாவெல்லை பிரசித்த நொத்தாரிசு சி. குணரத்ன அவர்களால் முடிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 1 ஆந் திகதிய 544 ஆம் இலக்கமுடைய ரனால, ஜயசிங்கமுல்லை, 68/பி இல் வசிக்கும் சிறியலதா விஜயரத்ன என்பவருக்கு வழங்கிய அற்றோனி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

மேலும் இதன் பின்னர் இந்த அற்றோனி தத்துவத்தின் மூலம் இவர் செய்கின்ற செயல்களுக்கு நான் பொறுப்பல்ல என்பதனையும் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

பத்மலதா விஜயரத்ன,

ஜயசிங்கமுல்லை,
டெடிகமுவ,
ரனால.

10-199

---

## அட்டோர்ணி தத்துவப்பத்திரம் இரத்துச் செய்தல்

ரத்கம, கபுமுல்ல, திலகரத்ன மாவத்தையில் வசிக்கும் தெடிமுனி ஜகத் பியலலால் டி சில்வா ஆகிய நான், பிரபல நொதாரிஸ் எம். எஸ். தஹநாயக்க அவர்களால் 01.03.2006 ஆந் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்ட இலக்கம் 1163 இன்படி வழங்கப்பட்ட அட்டோர்னி தத்துவப்பத்திரம் என்னால் பங்கமுவ ஆரச்சிகே சமன் தம்மிக்க என்பவருக்கு வழங்கப்பட்ட மேற்படி அட்டோர்ணி தத்துவப்பத்திரம் உடனடியாக இரத்துச்செய்கிறேன்.

மேற்படி பங்கமுவ ஆரச்சிகே சமன் தம்மிக்க என்பவர் செய்து கொள்ளும் எந்த கருமங்களுக்கும் நாம் பொறுப்பல்ல என்பதை மேலும் தெரிவிக்கிறேன்.

தெடிமுனி ஜகத் பியலலால் டி சில்வா

10- 255

---

## (107ம் அதிகாரமான) நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தின் முதலாவது அட்டவணையின் "அ" பிரிவில் 2ஆம் பிரமாணத்தின் கீழான அறிவித்தல்

பிரதிக்கினை எழுதுநர் பயிற்சி பெற்ற எனது பயிற்சிக்காலம் முடிவடைந்திருப்பதால் நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் தகுதி பெற்றுள்ளேன். ஆதலால் நொத்தாரிஸ் இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு பதிவாளர் நாயகம் அவர்கட்கு விண்ணப்பிக்கவுள்ளேன் என்பதை இல. 102, கிராம அபிவிருத்தி திட்டம், திருநெல்வேலி, கோப்பாய் எனும் முகவரியில் வசிக்கும் செல்வி அபர்ணா சதாசிவ ஐயர் ஆகிய நான் இத்தால் யாவர்க்கும் அறியத் தருகிறேன்.

அ. சதாசிவ ஐயர்.

2006.09.21

10-235

---

## நொத்தாரிஸ் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அறிவித்தல்

மாத்தளை மாவட்டம், மாத்தளை களுதாவளை, வட்டவீதி, இலக்கம் 113 ஏ 2ஆம் வட்டாரம் என்ற இடத்தில் வசிக்கும் கறுப்பையா தியாகராஜா ஆகிய நான், மாத்தளை மாவட்டத்தில் தமிழ் மொழியில் நடவடிக்கை மேற்கொள்ளும் பிரசித்த நொத்தாரிஸ் ஒருவராகச் சேருவதற்கான நொத்தாரிஸ் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தின் 1ஆம் அட்டவணையின் "ஆ" பிரிவின் 2ஆம் ஏற்பாட்டுக்கமைய பதிவாளர் நாயகத்திடம் கோருவதாக இத்தால் அறியத்தருகிறேன்.

கே. தியாகராஜா.

2006.09.28

10-230

---

## (107ஆம் அதிகாரமான) நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தின் முதலாவது அட்டவணையின் "அ" பிரிவில் 2ஆம் பிரமாணத்தின் கீழான அறிவித்தல்

பிரதிக்கினை எழுதுநர் பயிற்சி பெற்ற எனது பயிற்சிக்காலம் முடிவடைந்திருப்பதால் நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் தகுதி பெற்றுள்ளேன். ஆதலால் நொத்தாரிஸ் இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பதிவாளர் நாயகம் அவர்கட்கு விண்ணப் பிக்கவுள்ளேன். என்பதை இல. 102, கிராம அபிவிருத்தி திட்டம், திருநெல்வேலி, கோப்பாய் எனும் முகவரியில் வசிக்கும் நடராஜ ஐயர் சதாசிவ ஐயர் ஆகிய நான் இத்தால் யாவர்க்கும் அறியத்தருகிறேன்.

ந. சதாசிவ ஐயர்.

2006.09.21

10-234

---

## அற்றோனித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

பத்தரமுல்லை, பன்னிப்பிட்டிய வீதியிலுள்ள 419 ஆம்இலக்கத்தைச் சேர்ந்த அலி நூர்தீன் ஆகிய நான், கொழும்பு 5, திம்பிரிகஸ்யாய வீதியிலுள்ள 256/3 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த மொஹமது பாயாஸ் சலீம் என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டதும், பிரசித்த நொத்தாரிசு வான எம். ஆர். எம். சல்மான் என்பவரினால் அத்தாட்சிப்படுத்

தப்பட்டதும், 2001 ஓகத்து 16 ஆந் திகதிய 998 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அற்றோனித்தத்துவத்தை இல்லாதொழித்து செல்லுபடியற்றதாக்கியுள்ளேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

அலி நூர்தீன்,

2006, செத்தெம்பர்

10- 246

---

### அற்றோனித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

கீழே கையொப்பமிடுகின்ற பிலியந்தலை,மாம்பெ விஸ்வகல வீடமைப்புத் தொகுதியைச் சேர்ந்த தெல்வத்தகே சுஜீவ தீப கருணாரத்ன ஆகிய என்னால், யக்கலமுல்ல, பொல்பாகொட, அதிகொடவத்தே, 360ஆம் இலக்கத்தைச் சேர்ந்த வன்னிஆரச்சி கங்கானம்லாகே நில்மினி சம்பிகா குமாரி என்பவரிடம் வழங்கப்பட்ட கொழும்பு மாவட்டத்தின் பிரசித்த நொத்தாரிசு திருமதி எம். எம். மாகிட்டிபெ என்பவரால் 2003 ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 290 ஆம் இலக்க அற்றோனி தத்துவப் பத்திரம் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அழித்து இரத்துச் செய்யப்பட்டதென்றும், அந்த வன்னிஆரச்சி கன்கானம்லாகே நில்மினி சம்பிகா குமாரி என்பவர் எனது அற்றோனித் தத்துவக்காரராக தொடர்ந்தும் செயலாற்றமாட்டார் என்றும் இன்று முதல் அவரால் செய்யப்படுகின்ற எந்தவொரு கொடுக்கல்வாங்கலுக்கும் நான் பொறுப்பாக இருக்க மாட்டேன் என்றும் சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

டி. எஸ். டி. கருணாரத்ன,

2006, செத்தெம்பர் 25.

10- 245

---

### அட்டர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

1. திருமதி பதிலாபீஹசன், 2. திரு. பக்கீர் மொஹிதீன் மொஹமட் சரூக் 3. திரு. அருளைமா சிவபாதசுந்தரம் 4. திரு. சுப்பையா கோபால், 5. திரு. முடியப்பன் முருகையா, 6. திரு. தோமஸ் மரியசூசை, 7. டேவிட் எமலினாராணி ஆகிய எங்களால் பிரசித்த நொத்தாரிசும், வழக்கறிஞருமான திரு. ஏ. பீ.கணபதிப்பிள்ளை அவர்களால் 1993 ஒற்றோபர் 22 ஆந் திகதியிடப்பட்ட அட்டர்ணி தத்துவ இலக்கம் 1171 மூலம் இல. 14 செப்பல் வீதி, நுவரெலியா சின்னசாமி தாயுமானவன் அவர்களுக்கு எங்கள் ஏழு பேரால் வழங்கப்பட்ட அட்டர்ணித் தத்துவத்தை 2006 ஓகத்து 21 முதல் நாங்கள் மட்டும் அதாவது இல. 2, சென் அண்ரூஸ் ட்ரைவ் நுவரெலியா, தோமஸ் மரியசூசை, இல. 18/1, கிளன் போல் வீதி, நுவரெலியா, டேவிட் எமலினாராணி ஆகிய இருவரும் செல்லுபடியற்றதாக்குவதாயும், 2006 ஓகத்து 21 முதல் இவரால் செய்யப்படும் எவ்வித செயற்பாடுகளுக்கும் நாங்கள் இருவரும் பொறுப்பாளிகளல்ல என்பதையும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறியத் தருகிறோம்.

தோமஸ் மரியசூசை,
டேவிட் எமலினாராணி.

10- 218

---

## அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

### மட்டக்களப்பு மாவட்டத்தின் பிறதேச குடிவகைத் தவறணை குத்தகை விற்பனை - 2007

1982.08.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளிவந்த 1982 ஆம் ஆண்டின் பிறதேச குடிவகை குத்தகை விற்பனை விதிகளின் படியும், தற்போது அமுலில் இருக்கும் மது பரிபாலன எல்லா அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருத்தமான விதிகளின்படியும், கீழ்க்காணும் தவறணையில் 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை பிறதேச குடிவகை விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிட்ட நேரம், திகதி வரை மட்டக்களப்பு அரசாங்க அதிபரால் மட்டக்களப்பு கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும். அப்போது கேள்விக்காரர்கள் இக்கச்சேரியில் சமுகமளிக்க வேண்டும்.

2. விண்ணப்பங்களை எந்தக் கச்சேரியிலோ, மதுவரி அதிபர் அலுவலகம்-கொழும்பிலோ, உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகம்-கண்டியிலோ, மதுவரி மேற்பார்வையாளர் அலுவலகம்-மட்டக்களப்பிலோ ரூபா 1,500 கொடுத்து கச்சேரியில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் காட்டி பெறும் படிவங்களில் கச்சேரி பற்றுச்சீட்டை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். கேள்விப்பத்திர விநியோகம் 2006.11.09 ஆந் திகதி பகல் 12.00 மணியுடன் முடிவடையும்.

3. 1982.08.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசு வர்த்தமானியில் காணப்படும் 1982 ஆம் வருட பிறதேச குடிவகை விற்பனை நிபந்தனைகளின்படி பெறுமதிச் சான்றிதழ் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் இணைக்கப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் நிராகரிக்கப்படும்.

5. குத்தகை எடுத்தவர், தான் குறிக்கப்பட்டபடி பிறதேச குடிவகைத் தவறணைக் குத்தகையை ஏற்றுக்கொண்டவுடனே மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரால் பாதுகாப்பு வைப்புப் பணமாக குறிப்பிடும் தொகையை உடனடியாக கச்சேரியில் செலுத்தி குத்தகைப் பத்திரம், நிபந்தனைப் பத்திரம் ஆகியவற்றில் முத்திரையில் கையொப்பம் இடல் வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்கட்கு செலுத்திய பணத்தைத் திருப்பியெடுக்க விரும்பினால் தங்கள் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை நிரப்பாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

7. குத்தகைக்கு எடுப்பவர் மட்டக்களப்பு மாநகர வட்டாரம் 2 இல் இருக்கக்கூடியதாகவும் தவறணை சகல வசதிகள் பொருத்திய கட்டிடத்தில் இருப்பதை மாநகர சபையினுள் சிபார்சு செய்யப்பட்ட கட்டிட வரைபடத்தின் பிரதியை இணைத்தல் வேண்டும்.

8. தற்போது இருக்கும் தவறணை நிலம் தொடர்ந்து வரும் காலத்திற்கும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை.

9. ஏனைய விபரங்களை மட்டக்களப்பு கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

க. மகேசன்,
பதில் அரசாங்க அதிபர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

மாவட்டச் செயலகம்,
மட்டக்களப்பு,
12.09.2006.

**அட்டவணை**

| பிரிவு | தவறணை இருக்கும் உள்ளூர் பகுதி | கேள்வி நேரம் | திறக்கும் திகதி |
|---|---|---|---|
| மண்முனை வடக்கு | மட்டக்களப்பு மாநகர சபை, மட்டக்களப்பு வட்டாரம் 2 இல் | மு. ப. 10.00 மணி | 2006.11.10 |

**கவனிக்க.**- குத்தகை எடுக்காமலிருந்தால் மறு விற்பனை 2006.11.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

10-29

# ஏல விற்பனைகள்

**மக்கள் வங்கி - பேராதனை**

1986ம் ஆண்டின் 32ம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி எனும் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர கங்கபலாத்த வல்கம அல்லது பிலபிட்டிய உம், சூரியகொட ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள பீநிட்லியன்ஹில் எஸ்டேட்யீ என்றழைக்கப்படும் 1999.02.23 ஆந் திகதி எல். டி. ப்பெரன்சிஸ் டயஸ் நில அளவையாளர் அவர்களால் 1250 பீ இலக்கங்கொண்ட மூல வரைவு படத்தின் பிரகாரம் பிரித்து ஒதுக்கப்பட்ட லொட் இலக்கம் 74பீ கொண்ட பர்ச்சஸ் முப்பத்தொன்று (பர்ச்சஸ் 31) விசாலமுள்ள காணியும் அங்கே அமைந்துள்ள பயிர்களும் கட்டிடங்களும் இலைகள் பழங்கள் ஆகிய சகலவைகளும் உட்பட ஏலவிற்பனை.**

மக்கள் வங்கி மூலம் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் எங்களால் 2006.12.15 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு பிரசித்த ஏலத்தில் ஆதனங்கள் அமைந்துள்ள இடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

2002.07.04 ஆந திகதிய அரச வர்த்தமானி மற்றும் 2003.06.23 ஆந் திகதிய "தினமின", "டேலிநியூஸ்", "தினகரன்"ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள தீர்மான அறிவித்தலுக்கு கவனத்தைச் செலுத்தவும்.

**ஆதனத்திற்கு நுழையும் வழி.**- பேராதனை முருதலாவை பாதையில் சூரியகொட அரச மரத்திற்கு அருகில் தெற்கில் இருக்கும் நிவ்லியன் ஹில் தோட்டத்திற்குச் செல்லும் பாதையில் ஒரு கிலோ மீட்டர் அளவில் சென்ற உடன் மிகவும் சக்தி வாய்ந்த மின் கம்பிகள் இழுக்கப்பட்டிருக்கும் மேற்கூறப்பட்ட ஆதனம் அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை.**– ஏலவிற்பனை இறுதியின் பொது ஒரு சிறந்த கொள்வனவாளர் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஒலு பணத்தொகையைச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையில் 10% ;
2. மாகாண அதிகார சபைக்கு குத்தகைக்காக மாகாண அதிகார சபைக்கு 1% ;
3. ஏலதாரரின் கொமிஸ் தொகையாக விற்பனை விலையின் 2 1/2% ;
4. லிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
5. விற்பனை செலவும், ஏனைய கட்டணங்கள் இருப்பின் அப் பணத்தொகையும்.

கொள்வனவு விலையில் மிகுதி 90% வீதமான தொகை, விற்பனை தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் "கண்டி மக்கள் வங்கி (பிரதேச தலைமை அலுவலகம்), பிரதேச முகாமையாளர்"க்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இலக்கம் 081-2234283, 081 - 2223017

உரிமை ஒப்பனைகளும், ஏனைய விபரங்களும் மக்கள் வங்கி, மேற்குறிப்பிட்ட விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டுளள் பணத்தொகை குறிப்பிடப்பட்டுள்ள தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தாவிடடால், தற்போதைக்கு செலுத்தப்பட்டிருக்கும் கொள்வனவு விலையில் 10 வீதமான பணத்தொகையை மீண்டும் செலுத்தாமல் இருப்பதற்காகும் கொடுப்பனவுகளும் மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கையில் முன்னனியில் திகழும்
அதிகாரம் பெற்ற ஏலதாரர்
(அரச தனியார் வங்கியாளர்களுக்காக)
நீதிமன்ற ஆணையாளர்களுக்காகவும்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் :<br>24, டொரிங்டன் பாதை,<br>கண்டி. | நகர அலுவலகம் :<br>55ஏ தர்மபால மாவத்தை,<br>கொழும்பு 3 |
| தொலைபேசி இல. 081-2224371/<br>081- 2227593<br>பெக்ஸ் : 081-2224371 | 011-2448526<br>011-2441761<br>011-2448526 |
| | ஈ-மெயில்:<br>Samera@Sri lanka.net |

10-238

---

**மக்கள் வங்கி - கம்பளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி எனும் பிரிவின் கீழான தீர்மானம்

**மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் உடுநுவர உதவி ஆளுநர் பிரிவில் மெத பலாத்த கோரளே ஹொன்டியாதெனிய கிராம சேவையாளர் பிரிவில் லுனுகம கிராமத்தில் அமைந்துள்ள கூரகல குடியேற்றம் என்றழைக்கப்படும் காணியிலிருந்து நில அளவையாளர் நாயகம் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட மஹா 4167ம் இலக்கங்கொண்ட மூலவரவு படத்தின் 13ம் லொட் இலக்கம் என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட ஹெக்டயர் சைபர் தசம் சைபர் இரண்டு ஒன்று (ஹெக்டயர் 0.029) விசாலமுள்ள வீடும் காணியும் ஏல விற்பனை**

மக்கள் வங்கி மூலம் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் எங்களால் 2006.11.15 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பிரசித்த ஏலத்தில் ஆதனங்கள் அமைந்துள்ள இடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

2005.03.18 ஆந் திகதிய அரச வர்த்தமானியிலும் 2005.08.05 ஆந் திகதிய "தினமின","டேலிநியூஸ்" "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஏல விற்பனை தீர்மான அறிவித்தலுக்குக் கவனம் செலுத்தவும்.

**ஆதனத்திற்கு நுழையும் வழி.**– கம்பளையிலிருந்து வெலிகல்ல வரை சென்று இடது பக்கத்தில் இருக்கும் தலவத்துர பாதையில் 1 கிலோ மீட்டர் அளவில் சென்று கூரகல குடியேற்றம் வரை சென்று பிரதான பாதையிலிருந்து இடது பக்கத்தில் இருக்கும் பாதையில் சிறிது தூரம் சென்ற உடன் பாடசாலைக்கு அருகில் இடது பக்கத்தில் பாதையில் இருக்கும் பாதையில் சிறிது தூரம் சென்ற உடன் இடது பக்கத்தில் மேற்கூறப்பட்ட ஆதனம் அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை.**– ஏலவிற்பனை இறுதியின் பொது ஒரு சிறந்த கொள்வனவாளர் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் பணத்தில் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையில் 10% ;
2. மாகாண அதிகார சபைக்கு குத்தகைக்காக மாகாண அதிகார சபைக்கு 1% ;
3. ஏலதாரரின் கொமிஸ் தொகையாக விற்பனை விலையின் 2 1/2% ;
4. லிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
5. விற்பனை செலவும், விற்பனை சான்றிதலுக்காக முத்திரை கட்டணமும், ஏனைய கட்டணங்கள் இருக்கும் அப் பணத்தொகையும்

கொள்வனவு விலையில் மிகுதி 90% வீதமான தொகையும், விற்பனை தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் "கண்டி, மக்கள் வங்கி, பிரதேச தலைமை அலுவலகத்தில்" மக்கள் வங்கி கிளைக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இலக்கம் 081-2234283, 081 - 2223017

உரிமை ஒப்பனைகளும், ஏனைய விபரங்களும் மக்கள் வங்கி, மேற்குறிப்பிட்ட விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டுள் பணத்தொகை குறிப்பிடப்பட்டுள்ள தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால், தற்போதைக்கு செலுத்தப்பட்டிருக்கும் கொள்வனவு விலையில் 10 வீதமான பணத்

தொகையை மீண்டும் செலுத்தாமல் இருப்பதற்காகும் கொடுப்பனவுகளும் மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கையில் முன்னனியில் திகழும்
அதிகாரம் பெற்ற ஏலதாரர்
(அரச தனியார் வங்கியாளர்களுக்காக)
நீதிமன்ற ஆணையாளர்களுக்காகவும்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகம் : |
| 24, டொரிங்டன் பாதை, | 55ஏ தர்மபால மாவத்தை, |
| கண்டி. | கொழும்பு 3 |
| தொலைபேசி இல. 081-2224371/ | 011-2448536 |
| 081- 2227593 | 011-2441761 |
| பெக்ஸ் : 081-2224371 | 011-2448526 |
| | ஈ-மெயில்: |
| | Samera@Sri lanka.net |

10-239

---

## செலான் வங்கி லிமிட்டெட் - அவிசாவளை கிளை

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் விற்பனை

### காணிகள் ஏலவிற்பனை

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம்( அவிசாவளை பதிவு மாவட்டம்) ஹேவாகம் கோறளை உடுகஹபற்று, அவிசாவளையில் குடாகம வீதியில் அமைந்துள்ள ஹொனிடொன் தோட்டம் என்றழைக்கப்படுகின்றதும் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ. பீ. எஸ். குணவர்தனவினால் அளந்து உப பிரிவாக எல்லைகள் வரையறுக்கப்பட்டதும் வரைவு இல. 1444 மற்றும் 1982.05.01 திகதி கொண்டதும் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் யூ. ஆர் எதிரிஸிங்கவினால் அளந்து எல்லைகள் வரையறுக்கப்பட்டதும் வரைவு இல. 867 மற்றும் 1994.03.24 ஆம் திகதி கொண்ட துண்டு இல. 14 உடைய பதினாறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 16பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி**

**6 மேற்படி குறித்த வரைவு இல. 867 மற்றும் பீ34/262 இன் கீழ் அவிசாவளை காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**மற்றும் அவிசாவளை குடாகம வீதியில் அமைந்துள்ளதும் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ.பீ.எஸ். குணவர்தனவினால் அளந்து உப பிரிவாக எல்லைகள் வரையறுக்கப்பட்டதும் வரைவு இல. 1444 மற்றும் 1982.05.01 ஆம் திகதி கொண்டதும் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் யூ. ஆர். எதிரிசிங்கவினால் அளந்த எல்லைகள் வரையறுக்கப்பட்டதும் வரைவு இல. 867 மற்றும் துண்டு இல. 42 உடைய பெறுமதிவாய்ந்த பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.) பரப்பளவு கொண்ட காணி**

**(குறிப்பிட்ட வரைவு இல. 867 மற்றும் பீ 34/288 - 93/241 இன் கீழ் அவிசாவளை காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.)**

*(கடன்பட்டார் என்ற வகையில் புவக்பிட்டியாவைச் சேர்ந்த முதலிகே டொன் பர்னாட் சுசில் மற்றும் புஸ்ஸல்லகே நதீகா மல்காந்தி சில்வா ஆகிய இருவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட காணி.)*

மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2006, ஒற்றோபர் 31 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 2006.07.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2006.07.15 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப", 2006.07.24 ஆந் திகதிய "வீரகேசரி" ஆகிய நாளிதழ்களையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடைகின்ற வழி.-** அவிசாவளையிலிருந்து கொழும்பு வீதியில் சுமார் 800 மீற்றர் உக்வத்த சந்தி வரை சென்று வலது புறமாக குடாகம வீதியில் (அல்லது கைத்தொழில் பூங்கா) பக்கம் திரும்பி சுமார் 200 மீற்றர் சென்று ஹொனிடொன் பிளேஸ் இல் சுமார் 20 மீற்றர் சென்று வீதியின் அருகாமையில் இடது பக்கமாகவுள்ள குறித்த காணியை சென்றடையலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாக செலுத்தல் வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்தவேண்டிய ஒரு விதம் (1%) ; ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%) ; விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2000 ரூபா ; இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி 500 ரூபா ; விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) இடமிருந்து பெற்றுக் கொள்ளவும் முடியும். தொலைபேசி : 011-2456284, 2456285, 2456263.

துசித கருணாரத்ன (ச. நீ.)
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளரும்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ,

தொலைபேசி இல. 2696155, 2572940

10-229

---

## கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் (எப்சிபியூ திணைக்களம்)

ஆதனங்கள் ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழ் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் கீழ் அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனங்கள்-

அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படும் :-

(1) **முதலாவது அட்டவணை** - ஆதனமும் கட்டிடங்களும் 2006, நவெம்பர் 14 ஆந் திகதி காலை 11.00 மணிக்கும்,
(2) **இரண்டாவது அட்டவணை** - இயந்திரங்கள் 2006, நவெம்பர் 14 ஆந் திகதி காலை 11.30 மணிக்கும்,

(3) **மூன்றாவது அட்டவணை** - வியாபாரம் மற்றும் உற்பத்தியில் உள்ள மூலப்பொருட்கள் 2006, நவெம்பர் 14 ஆந் திகதி பிற்பகல் 12.30 மணிக்கும்-

**முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு அரசாங்க அதிபர் எல்லைக்குள் தாசியபத்து அலுத்குரு கோரலையில் அவரிவத்த கிராமத்தில் அமைந்துள்ள கட்டுநாயக்க வர்த்தக முதலீட்டு எல்லையில் மற்றும் கொழும்பு பிரதேச அபிவிருத்தி கமிஷன் பிரகாரம் நில அளவையாளர் ஈ. கே. நாணயக்காரவின் 1992.02.25 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 147/92 இல் காண்பிக்கப்பட்ட லொட் 22A மற்றும் இக்காணியாக அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாம் சேர்த்து. இக்காணியின் விஸ்தீரணம் (1ஏ. 1றா. 4.37 பே.) ஹெக். 0.5169 இல் இருந்து (0ஏ. 1றா. 4.37 பேர்ச்சஸ்) என்ற காணி தவிரஇக்காணி உரிமையாளர்களால் காண்பிக்கப்பட்டது.

**இரண்டாவது அட்டவணை**

(1) 1 எண்ணிக்கை ஸ்டெப்ட் என்ட் மற்றும் பிளஸ் கட் டியுப் இயந்திரம் AM 1130 வின்ட் மொலர் மற்றும் செய்யப்பட்டது. ஒல்ச்சர் ஜெர்மனி மற்றும் தருவிக்கப்பட்டது: கரண்ட் மசின் யண்டல் ஜிஎம்ஜிஎச், ஜேர்மனி, செய்யப்பட்ட வருடம் : 1960, கமிஷன் இலக்கம் : 12865 அதனுடன் உள்ள மற்றைய பகுதிகள், பாகங்கள் உட்பட

(2) எண்ணிக்கை பிலக்ஸ கிரபிக்டெயில்-என்ட் பிரிண்டர் செய்யப்பட்டது : காட்மண் மற்றும் ஒல்மன், பியல்பெல்ட், ஜேர்மனி, தரம்: 481, வருடம் செய்யப்பட்டது 1945, தருவிக்கப்பட்டது கரண்ட் மசிண்யண்டல் ஜிஎம்பிஎச் ஜெர்மனி அத்துடன் உள்ள பாகங்கள் மற்றும் பகுதிகள் உட்பட

(3) 1 எண்ணிக்கை வால்வ் பொட்டிமர் AD 1600, தரம் விண்ட்மொலர் மற்றும் ஒல்ச்சர், ஜெர்மனி, 1964 ஆம் வருடம் செய்யப்பட்டது. அத்துடன் உள்ள பகுதிகள் மற்றும் பாகங்கள்

(4) 1 ஆம் இலக்க பசை செய்யப்படும் பகுதி, ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பகுதிகளும் மற்றும் மோட்டார் 220/380v, தருவிக்கப்பட்டது, கிராண்ட் மிசிண்யண்டல் ஜிஎம்பிஎச், ஜேர்மனி ; 1972 ஆம் வருடம் செய்யப்பட்டது, எகிமான், ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்டது.

(5) 1 எண்ணிக்கை அட்லஸ் கொப்கோ கொம்பரஸர் தாங்கி (1000 பாரம்) மற்றும் டெக் எலக்டிரிக் மோட்டார் ஸ்டாலர், ஒட்டோ லோட்/ஒப்,
தரம் GA 15-10, உற்பத்தி நாடு பெல்ஜியம்.

**மூன்றாவது அட்டவணை**

மூலப்பொருட்கள் உற்பத்திக்காகவும் மற்றும் வியாபாரத்தில் உள்ள பொருட்கள் :-

மூலப் பொருட்கள் பின்வருமாறு :

1 ஆம் இலக்கம் குலுபக் (70 ஜிஎஸ்எம் 1465 mm)
1 ஆம் இலக்கம் குலுபக் வெட்ஸ்டிரன்த் (90 ஜிஎஸ்எம்) 1465 mm)
அலு தரப்ட் (114 ஜிஎஸ்எம்) வட்டம் 1480 mm
பொட்டம் பட்ச் (160 mm) 90 ஜிஎஸ்எம்
பொட்டம் பட்ச் (170 mm) 90 ஜிஎஸ்எம்
1 ஆம் இலக்கம் CLU வெஸ்ட்ரன்த் (90 ஜிஎஸ்எம் 1430 mm)
குலுபக் (70 ஜிஎஸ்எம்) 1430 mm
அலு தரப்ட் (114 ஜிஎஸ்எம்) 1440 mm
பொட்டம் பட்ச் (90 ஜிஎஸ்எம் 180 mm)
பொட்டம் பட்ச் (90 ஜிஎஸ்எம் 190 mm)
1 ஆம் இலக்கம் குலுபக் (80 ஜிஎஸ்எம் 1430 mm)
அலுதரப்ட் (114 ஜிஎம் 1440 mm)
பொட்டம்பட்ச் (90 ஜிஎம் 2000 mm)
அன்டிசயிட்
எமியுபிக்ஸ் குட்ஸ்
எமியுபிக்ஸ் பழுது
சொலவிகொல்
சபர்பொக்
இன்க்-கருப்பு
இன்க்-நீலம்
ஸ்டெரிபிங் ரூல்ஸ் (4.2 ரோல்)
ஸ்டெரிபிங் கிளிப்ஸ் (100 x 1)
பொலிதீன் பாக்ஸ் (23 x 34)
பொலிதீன் கலர்ஸ் (72 x 96)
பிளாஸ்டிக் 1 கிலோ சொவ்டேவம்
பிளாஸ்டிக் 1 கிலோ சுபர்லொக்
கொண்டேனர்

சிலிகோன் பேப்பர் ரீல்ஸ்
80mm அகலம்
90mm அகலம்
280mm அகலம்

உற்பத்தியில் உள்ள, வியாபாரத்தில் உள்ள-
லோகல் சகிற் பக்ட்
ஓபன் டொப் சக்ஸ்
வால்வ் சக்ஸ்
களனி வெலி ஓபன் டொப் சக்ஸ்
இந்தோனேஷியா வால்வ் சக்ஸ்

(கடன் எடுத்த ஜே அன்ட் சி பக்கேஜிங் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 20, காலிமுக கேட் 2, கொழும்பு 3 இல் அமைந்துள்ளது. மேற்கூறிய அசைவான, அசைவில்லாத பொருட்களே கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்துள்ளனர்)

தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக தயவுசெய்து 07.07.2006 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் "லங்காதீப", "த ஐலன்ட்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும். மற்றும் விற்பனை அறிவித்தலுக்காக 2006.10.13 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2006.10.16 ஆந் திகதியுடைய "லங்காதீப", "த ஐலன்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்.**- இக்காணி கதிரான தெற்குக்கு மேல் கொழும்பு பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழு எல்லையில் அமைந்துள்ள கட்டுநாயக்க-சீதுவ நகரசபை எல்லையில் மற்றும் தாசியபத்து அலுத்குரு கோரலையில் நீர்கொழும்பு பதிவு எல்லைக்குள் கம்பஹா மாவட்டத்தில் இக்காணி அமைந்துள்ள இடத்தில் இருந்து 4 1/2 மைல் தூரத்தில் நீர்கொழும்பு பிரதான காணியாளர்களின் காரியாலயங்கள் அமைந்துள்ளது. கொழும்பு கோட்டையில் இருந்து நீர்கொழும்பு பிரதான வீதியில் சென்று 18 மைல் கட்டுநாயக்க சென்று கட்டுநாயக்க விமான நிலைய வீதியில் 1மைல் தூரம் சென்றபிறகு ஏயர் லங்கா பொதிகள் டெமினல் முன்பாக உள்ள பாதையில் சென்று அதன்பிறகு ரிங் வீதியில் திரும்பி இடதுபக்கம் 200 யார் சென்ற பிறகு ஆதனத்தைக் காண முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.-** ஏலவிற்பனை முடிவில் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களைச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% ;
(3) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் ஏலதாரர் தரகுப் பணம் 2.5% ;
(4) விற்பனைப் பத்திரத்திற்காக நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலவிற்பனைக்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் விலையின் மிகுதி 90% ஐ ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு செலுத்த வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** உரித்து உறுதிகளைப் பற்றிய விபரங்களுக்கு பின்வரும் அலுவலக பெற்றுக்கொள்ள முடியும் :-

முகாமையாளர்-அறவீடுகள்,
கமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்,
இல. 21, பிரிஸ்டல் வீதி,
கொழும்பு 01
தொலைபேசி இல. : 2347717
2447167
2347719
தொலைநகல் இல. : 2347717

எல். பி. சேனநாயக்க (ச. நீ.),
சிரேட்ட உத்தரவுபெற்ற ஏலதாரர் (அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகள்), விலைமதிப்பிடுநர், மேலதிக வர்த்தக நீதிமன்றம் மற்றும் கொழும்பு மாவட்ட நீதிமன்ற ஆணையாளர்,

99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/ தொலைநகல் : 011-2445393

10-263

---

## பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளின் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழான விற்பனை

**ஒரு பெறுமதியான சொத்துக்கான ஏல விற்பனை**

**மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பஸ்பாக கோரளை பகுதி செயலாளர் பிரிவு அம்பகமுவையில் அமைந்த காணி அளவையாளர் எச். சொக்மன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1964, மாச்சு 15 ஆந் திகதி கொண்ட வரைபடத்தில் குறிக்கப்பட்ட லோவர் டிவிஷன், கலபொட டிவிஷன் மற்றும் அப்பர் டிவிஷன் என்பவற்றை உள்ளடக்கிய கலபொட எஸ்டேட் என்றழைக்கப்படும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணி தேயிலை மற்றும் பயிர்கள் தொழிற்சாலை கட்டிடம், பங்களா மற்றும் வேறு கட்டிடங்களும் அங்குள்ள யாவையும் உட்பட**

**(விஸ்தீரணம் : 859ஏ. 1றூ. 34பே.)**

**சொத்துக்குச் செல்லும் வழியும் பிரதான இலக்கங்களுக்கான தூரமும்.-** கொழும்பிலிருந்து கொழும்பு-இரத்தினபுரி-மட்டக்களப்பு 'A4' பெரும் வீதி வழியாக அவிசாவளை வரை சென்று அவிசாவளை-ஹட்டன் 'A7' பெரும் வீதி வழியாக கினிகத்ஹேன வரையும் சென்று அங்கிருந்து 12.3 கி. மீற்றருக்கு அப்பால் 59/12 ஆம் இலக்க கால்வாய் அருகே வலது பக்கமாக திரும்பி ரொசெல்ல வீதி வழியாக ரயில் கடவையைக் கடந்து 8 கி. மீ. வரை சென்றால் கலபொட எஸ்டேட்டை அடையலாம். குறிப்பிட்ட காணியில் இருந்து ஹட்டனுக்கு 18.5 கி. மீ. கினிஹத்ஹேனைக்கு 22 கி. மீ. கொழும்புக்கு 124.5 கி. மீ.

*(சொத்து வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா பேங்கிங் கோர்ப்ப ரேஷனில் (முன்பு பேன் ஏசியா வங்கி லிமிட்டெட்) அடகு வைக்கப் பட்டுள்ளது.)*

*(கடமைப்பட்டவரான கொழும்பு 2, வெக்ஷோல் வீதி, 55/75 ஆம் இலக்க இடத்தில் பிரதான வர்த்தக ஸ்தானத்தை (ஜனதா எஸ்டேற் டெவலப்மன்ட் போர்ட்) ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையால் சொத்து பேன் ஏசியா பேங்கிங் கோரப்பரேஷன் லிமிட்டெட்டில் (முன்பு பேன் ஏசியா வங்கி லிமிட்டெட்) அடகு வைக்கப்பட்டது.)*

கொழும்பு பகிரங்க நொத்தாரிசு டி. வி. எகொடகே என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2004, செத்தெம்பர் 2 ஆந் திகதியும் 272 ஆம் இலக்கமும் கொண்ட பிணையுறுதி மற்றும் கொழும்பு பகிரங்க நொத்தாரிசு என். ஐ. சமரசிங்க என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2001, நவெம்பர் 7 மற்றும் 1999, யூன் 24 ஆந் திகதியும் 1093 மற்றும் 737 ஆம் இலக்கங்கள் கொண்ட அடகு பிணைகளின் மேல் கடமைப் பட்டவர் கட்டணம் செலுத்தத் தவறியுள்ளார்.

வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷனால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் நாங்கள் 2006, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு மேற்படி சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வோம்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய உள்ளூர் அதிகார வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமான 2 1/2% (இரண்டரை வீரம் மட்டும்) ;
(4) ரூபா 45,000 க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவுகளின் 50% ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ. 500.
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்கான நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியி லிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2005, ஏப்பிறல் 25 ஆந் திகதிய "சிலோன் டெயிலி நியூஸ்", "லக்பிம", "சுடர்ஒளி" புதினப் பத்திரிகைகளையும் 2005, மே 15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.

மேலதிக விபரங்கள், உறுதி மற்றும் ஏனைய ஆவணங்களை "கொழும்பு 03, காலி வீதி, 450, பேன் ஏசியா பேங்கிங் கோர்ப்பறேஷன், உதவிப் பொது முகாமையாளர்-சட்டம்" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும். பார்வையிடவும் முடியும்.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
கீர்த்திவாய்ந்த முன்னணி பட்டய ஏலதாரர்கள்,
இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார்துறை
வங்கிகளுக்கான மதிப்பீட்டாளர்கள், நீதிமன்ற
ஆணையாளர்கள்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகம் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி | 55ஏ, தர்மபால மாவத்தை, கொழும்பு 03 |
| தொலைபேசி இல.: 081-2227593 | தொலைபேசி இல.: 2441761 |
| டெலி/ஃபக்ஸ் : 081-2224371 | டெலி/ஃபக்ஸ் இல.: 2448526 |
| | ஈ-மெயில் : sameera@srilanka.net |

10-288

---

### இலங்கை வங்கி

*1968 ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்து, நிலமனை ஏல விற்பனை**

*(ஜெம்பிரிஜ் வீடியோ சென்ரரைச் சேர்ந்த திருவாளர்கள் தவசிப்பிள்ளை வைத்தியலிங்கம், வைத்தியலிங்கம் தங்கராஜ், வைத்தியலிங்கம் பாலகிருஸ்ணன், வைத்தியலிங்கம் புஸ்பராஜ் ஆகியோரின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005.04.01 ஆந் திகதி 1387 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2005.03.28 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினகரன்", "தினமின" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும்பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 24, ரொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம 2006.10.28 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைக்குள் கொட்டுகொடெல்ல வீதியில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் டி. பி. அத்தநாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 1983.08.23 ஆந் திகதிய இல. 209 கொண்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள "கொட்டுகொடெல்ல" வீதி என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய மேற்குறிப்பிட்ட வரைபடத்திற்கிணங்க- வடக்கில் : வரிமதிப்பீட்டிலக்கம் 67, 69 இன் பாகமும் ; கிழக்கில் : கொட்டுகொடெல்ல வீதியும் சாலை மருங்கில் உள்ள நடைபாதையும் ; தெற்கில் : வரிமதிப்பீட்டிலக்கம் 63 கொண்ட நிலமனையின் சுவரும் ; மேற்கில் : கண்டி, கொட்டுகொடெல்ல வீதியும் எல்லைகளாகக் கொண்ட இரண்டு தசம் ஆறு நான்கு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 2.64பே.) விஸ்தீரணமுடைய வரிமதிப்பீட்டிலக்கம் 65 கொண்ட காணித்துண்டு முழுவதும் அதற்குள் அமைந்துள்ள அனைத்துமாகும். இது கண்டி காணிப்பதிவகத்தில் A 317/200 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஈ. எம். உபதிஸ்ஸ பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
கண்டி.

10-287

---

### இலங்கை வங்கி

*1968 ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்து, நிலமனை ஏல விற்பனை**

*(திருமதி தல்பிட்டிய ராலலாகே மெனிக்கே சில்வா மறுபெயர் தல்பிட்டிய ராலலாகே ஹீன் மெனிக்கே சில்வா என்பவரின் கடன் பொறுப்புகளுக்காக இல. 10, சங்கமித்த மாவத்தை, கண்டி என்னும் முகவரியில் அமைந்த ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006.09.01 ஆந் திகதி 1461 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2006.08.28 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும்பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 24, ரொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர்கள் திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம 2006.11.11 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி நகர மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் கங்கவட்ட கோரளை, சங்கமித்த மாவத்தையில் அமைந்த பன்னிரண்டு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12.5பே.) விஸ்தீரணமுடைய காணியின் மேற்குறிப்பிட்ட பிரிக்கப்பட்ட பாகம் மற்றும் சங்கமித்த மாவத்தை, வரிமதிப்பிலக்கம் 10 ஐக் கொண்ட த டேல் என அழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்ட பாகத்திலிருந்து கண்டி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். சி. ஓ. தி லா மோட்டே தயாரித்த 1986, நவெம்பர் 3 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 5318/C இல் விபரித்த பன்னிரண்டு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12.5பே.) விஸ்தீரணமுடைய காணியின் பிரிக்கப்பட்ட குறித்த பாகம்– வடக்கிலும் மேற்கிலும் : அதே காணியின் மீதிப்பாகமும் ; கிழக்கில் : எஸ். டபிள்யூ. எஸ். லன்தீன் சில்வாவுக்குச் சொந்தமான வரிமதிப்பிலக்கம் 53 ஐக் கொண்ட நிலமனையும் ; தெற்கில் : திருமதி விஜேமான்னவுக்கு சொந்தமான நிலமனை இல. 10 உம் எல்லைகளாகக் கொண்ட காணியும் அங்கு அமைந்துள்ள சகலதுமாகும். இது கண்டி காணிப்பதிவகத்தில் பக்கம் ஏ208/200 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஈ. எம். உபதிஸ்ஸ பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
கண்டி.

10–285

---

### இலங்கை வங்கி

*1968 ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்து, நிலமனை ஏலவிற்பனை**

*(இல. 4/36, பிற்றகந்த றோட், அனிவத்த, கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. தர்மதிலக லொக்கு பொத்தகம அல்லது லொக்கு பொத்தகமகே தர்மதிலக்க அவர்களால் ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

கடன் கட்டு 94/02

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக் கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2004.08.06 ஆந் திகதிய 1353 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2004.07.29 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "டெய்லி நியூஸ்" ஆகிய புதினப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக் கிணங்க நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக வுள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய பணங்களையும் அறவிடும் பொருட்டு இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள சொத்தும் நிலமனையும் இல. 24, றொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களால் 2006.11.16 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குளியாப்பிட்டி பதிவுப் பகுதியில் ஹத்பத்து, கட்டுகம்பொல மேற்கு, மெதபத்து கோறளை, பறகம்மனவில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. சி. எஸ். குணரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1953.08.08 ஆந் திகதிய பி.2991 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 29 எனக் காட்டப்பட்டுள்ள "பறகம்மன வத்த" என்றழைக்கப்படும்– வடக்கில் : அதே காணியின் 2 ஆம் துண்டும் ; கிழக்கில் : அதே காணியின் துண்டிலக்கம் 30 உம் ; தெற்கில் : 12 அடி அகலமான றோட்டிற்கான ஒதுக்கமும் ; மேற்கில் : அதே காணியின் 28 ஆம் துண்டும் எல்லைகளாகக் கொண்ட ஒரு றூட் முப்பத்திநான்கு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 34பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணி முழுவதுமாகும். இது குளியாப்பிட்டி காணிப்பதிவகத்தில் எல்.187/238 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டபிள்யூ. டி. திலகரத்ன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
2 ஆம் நகரக் கிளை,
கண்டி.

10–284

---

### மக்கள் வங்கி–களனி கிளை

பெறுமதிமிக்க குடியிருப்பு ஆதனம் (கடுவளை நவகமுவவில் அமைந்துள்ளது) அதன்கண் அமைந்துள்ள சிறு வீட்டுடன் சேர்த்து ஏல விற்பனை

[காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 29பே. (ஒரு றூட் இருபத்தொன்பது பேர்ச்சுக்கள்)]

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.–** கொழும்பு–அவிசாவளை (லோ–லெவல்) வீதி வழியே ஏறக்குறைய 18.5 கி. மீ. செல்ல, எதிர்கொள்ளும் நவகமுவ தேவாலயத்திற்கு அருகே வலப்பக்கத்திலுள்ள வீதி வழியே ஏறக்குறைய 1/8 மைல் செல்ல இடப்பக்கத்திலுள்ள கெக்கிரிவெல வீதி வழியே மேலும் ஏறக்குறைய 150 மீற்றர் செல்ல எதிர்கொள்ளும் சிறிசுமனதிஸ்ஸ கனிஷ்ட வித்தியாலயத்திற்கு எதிரே செல்லும் வீதி வழியே ஏறக்குறைய 25 மீ செல்ல வரும் மாயிம்வ வீதிக்கு இடப்பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2006.11.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.*

**தீர்மான அறிவித்தல்களுக்கு**.- 2001.08.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2002.01.07 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "முதுன்கொடை, பெலும்மஹர, கண்டி வீதி, இல. 131, பிரதேச தலைமை அலுவலகம், உதவி பொது முகாமையாளர் (மேற்கு III)" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 033-2222325, 033-2226741 ; தொலைநகல் இல. : 033-2226165.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புகளையும் மேற்குறிப்பிட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) தண்டப் பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க
(சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்,
ஏலதாரர் மற்றும் விலைமதிப்பிடுநர்.

இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை,
தொலைபேசி இல. : 2419126.

10-266

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.